எனவே மாமன்றத் தீர்மானத்தில் தீர்மானிக்கப்பட்ட கருத்தினை மறுபரிசீலனை செய்து, மாநகராட்சிக்கு ஏற்படக்கூடிய கணிசமான மாதாந்திர ஈடுகட்ட முடியாத செலவினத்தை தவிர்க்க இயலும் என்ற கருத்தினையும் பரிசீலித்து, மேற்கண்ட டெண்டர்தாரான M/S.Food தொண்டு நிறுவனத்தாருக்கு நவீன நீச்சல் குளத்தினை பராமரிப்பு செய்ய அனுமதி உத்தரவு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.562**

**மாநகராட்சி நவீன நீச்சல் குளத்தை 3 ஆண்டுகளுக்கு பராமரிக்க பொருளில் குறிப்பிட்டுள்ள நிறுவனத்திற்கு அனுமதி வழங்கவும் ஒவ்வொரு ஆண்டும் இந்த நிறுவனத்தின் பராமரிப்பு தன்மையை ஆய்வு செய்து அதன்படி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**31) ம.பொ.4/ 32283/ 2008**

தமிழ் நாட்டில் பொதுமக்களின் வசதிக்காக சுகாதாரம், காவல் நிலையம் மற்றும் தீ குறித்த அவசர கால சேவையை மேற்கொள்ள தமிழ் நாடு அரசினால், அவசர கால மேலாண்மை மற்றும் ஆய்வு நிலையம் (Emerency Managment and Research Institute) (EMRI) செகந்திராபாத் நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் மதுரை மாநகரில் ஏழு ஆம்புலன்ஸ் வாகனங்களுடன் தனது சேவையை செப்டம்பர் '08ல் தொடங்க இருப்பதாக தெரிவித்து அவசர கால சேவைகளுக்காக கட்டுப்பாடு அறை ஒன்று தேவைப்படுவதால் மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தை ஒதுக்கீடு செய்து தரும்படி EMRI நிறுவனத்தால் கோரப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிறுவனம் தமிழ்நாடு அரசினால் நியமிக்கப்பட்டுள்ளதாலும், 24 மணி நேரம் அவசர கால சேவையை இலவசமாக வழங்க உள்ளதால் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை கருத்தில் கொண்டு மேற்கு மண்டலம் வார்டு எண் : 30 ல் மாடு வதை செய்யுமிடம் அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 32'x 13' அளவுள்ள கட்டிடம் தற்போது உபயோகத்தில் இல்லாததால் மேற்கண்ட இடத்தை அவசர கால சேவைகளை பொது மக்களுக்காக மேற்கொள்ளும் EMRI நிறுவனத்திற்கு இலவசமாக ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.563**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**32) ம.நி.1 / 5948 / 07**

மதுரை மாநகராட்சி பொறியியல் பணிகளில் காலியாக உள்ள உதவிப் பொறியாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரக கடிதம் எண். 54108/2006/MC-1 நாள்:13.2.2007–ன்படி, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது, மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் உள்ளதாலும், குறிப்பாக மதுரை மாநகராட்சியில் மின் ஆளுமை (E-governance) திட்டம் முழு அளவில் செயல்படுத்தும் வகையிலும், இதுவரை கணினி பிரிவிற்கென உதவி பொறியாளர் இல்லாத நிலையிலும், ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட உதவி பொறியாளர் பணியிடங்களில் நிர்வாக நலன் கருதி சிறப்பினமாக ஒரு உதவி பொறியாளர் (கணினி) பணியிடத்திற்கு சென்னை தொழில் மற்றும் செயல் வேலை வாய்ப்பகத்திலிருந்து 1:5 என்ற விகிதத்தில் வகுப்புவாரி சுற்றின் அடிப்படையில், பி.இ. Computer Science பட்டப்படிப்பு படித்த தகுதியான நபர்கள் பட்டியல் பெறப்பட்டு, பட்டியலில் கண்டுள்ள மூன்று நபர்களை சென்ற 23.7.2008 தேதியன்று சான்றிதழ்கள் சரிபார்க்கவும், அதனைத் தொடர்ந்து 10.9.2008 அன்று நேர்காணலுக்கு ஆஜராக கோரியதிலும், கீழ்கண்ட இரண்டு நபர்கள் மட்டுமே ஆஜராகினர்.

**1) எஸ். லோகேஷ்பிரபு – பொதுச்சுற்று (மிகவும் பிற்படுத்தப்பட்டோர்) 2006M29713 /28.11.06**
**2) ஏ. தாஜ்மீன் – பொதுச்சுற்று (பிற்படுத்தப்பட்டோர்) 1997F07411 / 19.8.97**

மேற்படி நபர்களின் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு, நேர்காணலுக்கென அமைக்கப்பட்ட குழுவின் முன்னர் மேற்கண்ட இரண்டு நபர்களும் ஆஜராகியதில், வரிசை எண்.1–ல் கண்டுள்ள திரு.எஸ்.லோகேஷ்பிரபு என்பவருக்கு மென்பொருள் தொழில்நுட்பத்தில் முன் அனுபவம் இருப்பதை கருத்தில் கொண்டு அன்னாரை உதவி பொறியாளர் (கணினி) பணியிடத்தில் ரூ.6500-200-10500 என்ற ஊதிய விகிதத்தில் முற்றிலும் தற்காலிகமாக அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டும், மதுரை மாநகராட்சி பணியாளர்களால் உதவி பொறியாளர் பணியிடத்தில் பணி உயர்வு கோரி, சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்டு நிலுவையில் இருந்து வரும் W.P.No.2058/08 வழக்கின் தீர்ப்பிற்கு பாதகமன்னியிலும், உதவிப் பொறியாளராக பணி நியமனம் செய்ய மதுரை மாநகராட்சி சட்டம் 1971 விதி எண். 104 பிரிவு 3(b)-ன்படி, மாமன்றத்தின் முடிவினைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.564**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**33) மவ5/30829/08**

மதுரை மாநகராட்சியை ஜவஹர்லால் நேரு நகர தேசிய புனரமைப்புத் திட்டத்தின் கீழ் செய்யப்படும் அபிவிருத்தி திட்டங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதற்காக மாநகர அபிவிருத்தித்திட்டம் தயார் செய்து மத்திய மாநில அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டம் ஒப்புதல் பெறப்படும் பொழுது மாநகராட்சியின் பல்வேறு இனங்களில் சீர்திருத்தம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து மத்திய/மாநில சம்பளபட்டுவாடா அலுவலர்கள், பொதுத்துறை நிறுவனங்கள்/தன்னாட்சி நிறுவனங்கள் மற்ற நிறுவனங்கள், வாரியங்கள், அனைத்து கம்பெனிகள், தனியார் கூட்டுறவு நிறுவனங்கள், தொழில் புரிவோர் என்.ஜி.எஸ்.டி வரிவிதிப்புக்கு உள்ளானவர்கள், சுயசம்பாத்தியம் உடையோர், மற்ற வணிகத்தில் ஈடுபட்டுள்ளோர், வர்த்தக நிறுவனங்கள், அதில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் ஏனையவைகளுக்கு தமிழக அரசு

சட்டம் 59/98-ன் படி 01.10.08-ம் தேதி முதல் தொழில்வரி பொது சீராய்வு மேற்கொள்ளுதல் தொடர்பாக மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 169-க்கு சட்ட திருத்தங்கள் சேர்த்தும் செடியூல் 2 பாகம் 5க்கு பின்னால் 5எ, என புதிதாக இணைத்தும் தமிழக அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை (தேர்தல்) பிரிவு 12.01.1999-ம் தேதிய அரசு ஆணை எண்:11ல் குறிப்பிடப்பட்ட விதி 16ன்படி ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை தொழில்வரியினை 25% சதவிகிதத்திற்கு குறையாமலும் 35% சதவிகிதத்திற்கு கூடுதலாகாமலும் நிர்ணயம் செய்து கொள்ள மாமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொழில்வரி விகிதாச்சாரத்தை மாற்றக்கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் சுற்றறிக்கை எண்:38714/2008/ஆர்1 நாள்:13.08.08ல் மேலே கண்டுள்ள அரசு ஆணையின் அடிப்படையில் மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 169-ன் பிரகாரம் தொழில்வரியை உயர்வு செய்து 01.10.08-ம் தேதி முதல், அரையாண்டு தொழில்வரி தொகையை ஏற்கனவே நடைமுறையிலுள்ள தொழில்வரித்தொகையிலிருந்து 25% சதவிகிதத்திற்கு குறையாமலும், 35% சதவிகிதத்திற்கு கூடுதலாகாமலும் நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் முடிவினைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு

<u>குறிப்பு:</u> தொழில் வரி அமுலாக்கம் செய்யப்படுவதால் 25% முதல் 35% சதவிதம் வரை அரை வருட தொழில்வரி நிர்ணய கணக்கீட்டுப் பட்டியல் விபரம்.

| வ.எண் | சராசரி அரைவருட மொத்தம் வருமானம் | தற்போது நடைமுறையில் இருந்து வரும் தொழில்வரி | 01.10.08-ம் தேதி முதல் உயர்வு தொழில் வரி | | |
|---|---|---|---|---|---|
| | | | 25% | 30 | 35% |
| 1 | ரூ.21000க்குள் | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 2 | ரூ.21001 முதல் 30000 | 75 | 95 | 100 | 105 |
| 3 | ரூ.30000 முதல் 45000 | 188 | 235 | 245 | 255 |
| 4 | ரூ.45001 முதல் 60000 | 375 | 470 | 490 | 510 |
| 5 | ரூ.60001 முதல் 75000 | 565 | 710 | 735 | 765 |
| 6 | ரூ.75000 க்கு மேல் | 750 | 940 | 975 | 1015 |

<u>மாமன்றத்தீர்மானம் எண்.565</u>

<u>தொழில்வரி 30% உயர்வு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

## <u>34) ஆர்.ஆர்.1/ 31034/ 2006</u>

மதுரை மாநகராட்சியின் பராமரிப்பிலுள்ள உள்வட்ட சுற்றுச் சாலையில் (உத்தங்குடி முதல் கப்பலூர் வரை) செல்லும் வாகனங்களுக்கு சுங்க கட்டணம் வசூல் செய்து கொள்ள மாமன்றத் தீர்மானம் எண். 225 / 9.6.2000 மற்றும் அரசாணை எண். 149 நகராட்சி நிர்வாகம் மற்றும் வழங்கல்துறை நாள் : 23.10.2000ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்தரவுகளின்படி 1.11.2000 முதல் 31.10.2007 முடிய ஒவ்வொரு ஆண்டும் 8 சதவீதம் உயர்த்தியும், 1.11.2007 முதல் 31.10.2008 முடிய கட்டணம் உயர்வு செய்யப்படாமலும் டெக்ஸ்கோ பணியாளர்கள் மூலம் மாமன்றத் தீர்மான எண். 273 / 271207–ன்படி வசூல் செய்யப்பட்டு வருகிறது.

1.11.2008 முதல் உள்வட்ட சுற்றுச்சாலையில் செல்லும் வாகனங்களுக்கு தற்போது வசூல் செய்து வரும் கட்டணத்தில் எத்தனை சதவீதம் உயர்த்தலாம் என்பதற்கும், மேலே கண்டுள்ள அரசாணை பத்தி 10 (இ)ல் தெரிவித்துள்ளவாறு சுங்ககட்டண வசூல் பணியை டெக்ஸ்கோ பணியாளர்களைக் கொண்டே வசூல் செய்யலாமா என்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : 1) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண். 149 நாள் : 23.10.2000 பத்தி 10 (எ)ல் உள்ளபடி 5 ஆண்டுகள் முடிந்த பின்னர் ஒவ்வொரு ஆண்டிற்கும் 8% உயர்வு செய்யும் முறை குறித்து முடிவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

2) மேற்படி அரசாணை 10 (ஜி)ல் கடனுக்காக வசூல் செய்யும் சுங்க கட்டணம் போதுமானதாக இருக்கும் பட்சத்தில் வருடாந்திர உயர்வு 8%-ஐ தொடர வேண்டுமா அல்லது குறைக்கப்பட வேண்டுமா என்பது குறித்து முடிவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

3) மேலும் மேற்படி அரசாணை பத்தி 10 (இ)ல் முதல் ஓராண்டுக்கு டெக்ஸ்கோ மூலம் வசூல் செய்யலாம் என்றும், பின்னர் திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் தனியாருக்கு ஒப்பந்த அடிப்படையில் வசூல் செய்வது குறித்தும் முடிவு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் உள்ளது. (மாமன்ற தீர்மானம் எண். 225 / 9.6.2000 அரசாணை எண். 149/23.10.2000 மற்றும் தற்போதுள்ள கட்டண விகிதங்கள் கோப்பில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன).

<u>மாமன்றத்தீர்மானம் எண்.566</u>

<u>8% உயர்வு செய்து டெக்ஸ்கோ பணியாளர்களை கொண்டு வசூல் செய்ய குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

## 35) H6/06561/ 2003

மதுரை மாநகராட்சி மகப்பேறுமனைகளுக்கு 16 துப்புரவு பணியாளர்கள் சப்ளை செய்ய குறுகிய கால டெண்டர் கோரியதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்த குவாலிட்டி சர்வீஸ் சொஸைட்டி நிறுவனத்தார்க்கு தினக்கூலி ரூ.97/- அடிப்படையில் 16 துப்புரவு பணியாளர்கள் 01.08.2008 முதல் 30.07.2009 வரை சப்ளை செய்ய வ.உ.மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும், மதுரை மாநகராட்சி மருந்தகம் மகப்பேறுமனை மற்றும் நலவாழ்வு மையங்களில் காலியாகவுள்ள பணியிடங்களுக்கு மருத்துவ அலுவலர் கோரியதிணங்க கூடுதலாக 4 இரவு நேரக் காவலர்கள் 6 கூட்டுபவர் மற்றும் தண்ணீர் எடுப்பவர்கள் மற்றும் 2 துப்புரவு ஊழியர்கள் ஆக மொத்தம் 12 ஊழியர்கள் தினக்கூலி ரூ.97/- அடிப்படையில் குவாலிட்டி சர்வீஸ் சொஸைட்டி நிறுவனம் மூலம் 30.07.2009 வரை சப்ளை செய்ய அனுமதித்து உத்தரவிட்டதற்கும், அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.567**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 36) B30 /29070 / 2008

மதுரை மாநகராட்சி வைகை குடிநீர் திட்டம் பண்ணைப்பட்டி வைகை குடிநீர் சுத்திகரிக்கும் நிலையத்திலும், அரசரடி நீரேற்று நிலையத்திலும் கீழ்காணும் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் சப்ளை பெற்று பணிகள் செய்யப்பட்டு வரப்படுகின்றது. சப்ளை உத்தரவு காலம் 31.8.2008-ம் தேதியுடன் முடிவடைவதால் புதியதாக ஒப்பந்த அடிப்படையில் கீழ்காணும் பணியாளர்களை சப்ளை பெற டெண்டர் வரவழைக்கும் பொருட்டு ரூ.18,35,000/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து முப்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) க்கு தயாரிக்கப்பட்டு உள்ளது. மேற்கண்ட மதிப்பீடு ஒப்புதலுக்கும், ஒப்புதல் பெற்ற பின்னர் டெண்டர் வரவழைக்கலாம் என்பதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

| வ.எண். | ஒப்பந்த பணியாளர்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | எலெக்ட்ரிசியன் தரம் – II | 7 |
| 2 | லேபரட்டரி உதவியாளர் தரம் – II | 2 |
| 3 | பிட்டர் ஹெல்பர் | 9 |
| 4 | பராமரிப்பு மஸ்தூர் (ஆண்–8 மற்றும் பெண்–2) | 10 |
| 5 | காவலர் | 11 |
| | **மொத்தம்** | **39 நபர்கள்** |

**மாமன்றத்தீர்மானம் எண்.568**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 37) பொ.5/ 16263 /2008

மதுரை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு 60 சோலையழகுபுரம் மாதா கோவில் மற்றும் இந்திராநகர் பகுதியில் மாரியம்மன் கோவில் உள்ளது. இக்கோயில்களில் நல்ல தண்ணீர் வசதியில்லாததாலும், இக்கோயிலுக்கு வழிபட ஆயிரக்கணக்கான மக்கள் வருவதாலும், மேற்கண்ட கோவிலுக்கு இலவச குடிநீர் குழாய் இணைப்பு வேண்டி அவ்வார்டு மாமன்ற உறுப்பினர் மனுவின் பரிசீலித்து மேற்கண்ட கோவிலுக்கு திருக்கோயிலின் பெயரில் ½ அளவுக் கருவியுடன் இலவச குடிநீர் குழாய் இணைப்பு அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.569**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 38) CW1/ 29846 /2008

மதுரை மாநகராட்சி 6–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.பி.காட்டுராஜா கடந்த 27/06/2008, 30/07/2008 மற்றும் 28/08/2008 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மாமன்றக் கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை. மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 60–ல் சொல்லப்பட்டுள்ளவைகளுக்குப்பட்டு மேற்படி சட்டம் பிரிவு 57(1) (கே)–ன்படி ஒரு மாமன்ற உறுப்பினர் கடைசியாக கலந்து கொண்ட கூட்டத்திலிருந்தோ அல்லது பதவியேற்றதில் இருந்தோ தொடர்ந்து மூன்று மாதங்கள் கலந்து கொள்ளாமல் இருப்பாராயின் அவர் மாமன்ற உறுப்பினர் தகுதியை இழந்தவராக கருதப்பட வகை செய்யப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சி சட்டம் **1971** பிரிவு **57(4)–**ல் கண்டுள்ளவாறு இவ்வாறு தொடர்ந்து மூன்று கூட்டங்களில் கலந்து கொள்ளாத நிலையில் மாமன்ற உறுப்பினர் தகுதியை இழப்பதை மாமன்றத்திற்கு தெரிவித்து, மாமன்றத்தின் முடிவைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :**

**1)** மதுரை மாநகராட்சி சட்டம் **1971** பிரிவு **57(4)**ல் ஆணையாளர் அறிக்கை அளித்து மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதன் பேரில் மாமன்றம் அவ்வாறான ஒருவர் மீது, மீண்டும் மாமன்ற உறுப்பினராக அமர்த்தி தீர்மானிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

**2)** மேற்படி மாமன்ற உறுப்பினர் உடல்நிலை சரியில்லாததால் மருத்துவ சிகிச்சை பெற்று வருவதாக மருத்துவச் சான்று அன்னாரின் சார்பாக 28.08.2008-ம் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் அளிக்கப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.**570

**இந்த மாமன்ற உறுப்பினர் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவ சிகிச்சை பெற்று வருவதாக கடிதம் கொடுத்திருப்பதால். இந்த மாமன்ற உறுப்பினர் மாமன்றத்தில் மூன்று மாதம் கலந்து கொள்ளாததற்கு தகுதி இழப்பிலிருந்து விலக்களித்து தொடர்ந்து இவர் மாமன்ற உறுப்பனராக நீடிக்க வேண்டியது என இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.**

## 39) ம.ந.6/மந1/14054/ 2004

மதுரை மாநகராட்சி மேற்கு மண்டல வளாகத்தில், அமைந்துள்ள 24 மணி நேர Emergency Obstetrician Care Centre மருத்துவமனைக்கு சுகாதார பணிக்கு ரூ. 97/- அடிப்படையில் **10** துப்புரவு பணியாளர்கள் ஒப்பந்ததாரர் திரு. M.முருகேசன் என்பவரால் சப்ளை செய்யப்பட்ட ஒப்பந்தப்பணி 30.06.2008-ல் முடிவடைந்ததை தொடர்ந்து அதே விலை விகிதமான தினக்கூலி ரூ. 97/- அடிப்படையில் 01.07.2008 முதல் 30.06.2009 வரை சப்ளை செய்ய வ.உ.மேயர் முன் ஒப்புதல் பெற்று பணிநீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கியதற்கும், மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து வழங்கவும், மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.**571

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

(ஒம்...) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

மதுரை
நாள் : **25.09.2008**

* * * * * * *

**கண்ணைக் காப்பது இமை"**
**"மண்ணைக் காப்பது மழை"**

மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2008**ம் ஆண்டு **செப்டம்பர்** திங்கள் **25-ம்** நாள் **வியாழக்கிழமை** காலை **12.30** மணிக்கு

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**1) W.S.1 / 31733/08**

ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம் என்பது Nation Rural Health Mission -6 ன் ஒரு அங்கம் ஆகும் மத்திய அரசு ஆணை எண்.G.O.No.2D No.18 Health and Family Welfare (EAP-01) Department Date 24.02.2006 ன்படி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள கர்ப்பினி தாய்மார்களுக்கு மருத்துவமனை பிரசவத்தை ஊக்குவிப்பதற்கு மத்திய அரசால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

நோக்கங்கள் :

- மகப்பேறு இறப்பு மற்றும் ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பை குறைக்கவும்
- வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் மருத்துவமனை பிரசவங்களை உயர்த்தவும்
- ஆரம்பக்காலத்திலேயே பிரசவ கால சிக்கல்களை கண்டறியவும்
- பிரசவத்திற்கு பின் தாயும், குழந்தையும் நல்ல ஆரோக்கியமாக இருக்கவும்.

**ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்திற்கான நெறிமுறைகள்**

- இந்நிதியுதவி பெறும் கர்ப்பினி பெண்ணின் வயது 19 –ம் அதற்கு மேல் இருக்கவேண்டும்.
- உயிருடன் பிறக்கும் இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் இந்த திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படும்
- பிரசவத்தின் போது குழந்தை இறந்து பிறந்தாலும், இந்த நிதியுதவி வழங்கப்படுகிறது.
- இந்நிதியுதவி உதவி பெற குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்குள் இருக்கவேண்டும்.
- பயனாளியின் ஆண்டு வருமானம் கிராம நிர்வாக அலுவலர் அல்லது நலவாழ்வு மைய பலநோக்கு சுகாதாரப் பணியாளர் முடிவு செய்யப்படவேண்டும்.
- கர்ப்பினி தாய்மார்கள் குழந்தை பிறந்த 7 தினங்களுக்குள் விண்ணப்பம் சமர்ப்பிக்கவேண்டும்.
- கர்ப்ப காலத்தில் குறைந்தது மூன்று கர்ப்ப கால பரிசோதனைக்கு மருத்துவமனைக்கு வரவேண்டும்.

**நிதியுதவி தொகை**

| | |
|---|---|
| மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு (அரசு மற்றும் மகப்பேறு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் தனியார் மருத்துவமனைகள்) | - ரூ.700/-ம் |
| வீட்டில் பிறக்கும் குழந்தைகளுக்கு | -ரூ.500/-ம் வழங்கப்படும் |

நிதி ஒதுக்கீடு

| | |
|---|---|
| 2008-2009 ஆண்டுக்கு | –ரூ.6,24,000/- |

திட்டம் தொடங்கும் நாள்:

ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம் விவரம் மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.572**
**பதிவு செய்யப்பட்டது.**

**2) ம.பொ. 2/ 29674/2008**

மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டலம் இஸ்மாயில்புரம் 12வது தெருவில் அமைந்துள்ள பொது கழிப்பறையானது பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் சாலையின் இருபுறமும் ஆக்கிரமைப்பு செய்யப்பட்டு, போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையூறாக உள்ளதால், சமூக விரோத செயல் நடைபெறும் சூழ்நிலையை தவிர்க்கும் பொருட்டு இந்த கழிப்பறையை இடித்து அப்புறப்படுத்த சுகாதாரக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதன்படி மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.-573**

**மேயர் மற்றும் ஆணையாளர் இந்த இடத்தை நேராய்வு செய்து முடிவு செய்ய வேண்டியது. என மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**3) JnS1/ 39079/2007**

ஜவஉறர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சியில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சிப்பம்-VII-ல் 2008-ம் ஆண்டு முதல் 2027 –ம் ஆண்டு வரை 20 ஆண்டுகள் தொடர்ந்து குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கும் பணியை செய்வதற்கும், குப்பையில் உள்ள மாற்று உபயோகத்திற்கு பயன்படுத்த இயலாத பொருட்களை சுகாதாரமுறையில் அமைக்கப்படவுள்ள குப்பை கிடங்கில் சேகரிக்கும் பணியை செய்வதற்கும் இதுவரை தேங்கியுள்ள குப்பைகளையும் சுகாதார முறையில் அமைக்கப்படவுள்ள குப்பை கிடங்கில் சேகரிக்கும் பணியை செய்வதற்கும் குறைவான ஒப்பந்தப்புள்ளியில் கொடுக்கப்பட்ட டிப்பிங் கட்டணங்களை அனுமதித்து மேற்கண்ட தற்போதைய நிகர மதிப்பு செலவினத்தை மேற்கொள்ளவும், பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்புடன் (Public Private Partenership Mode) செயல்படுத்தவும், இதற்கென ஸ்பெஷல் பர்பஸ் வேகிக்கல் (Special Purpose Vehicle ) என அமைப்பு ஏற்படுத்தவும் மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான அவனியாபுரத்திலுள்ள கழிவுநீர் பண்ணையில் 110–ஏக்கர் இடத்தை குத்தகை அடிப்படையில் ஒரு சதுர மீட்டருக்கு 1.00 ரூபாய் என ஒதுக்கீடு செய்யவும் மேலும் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு இம்மாநகராட்சி சார்பில் இணைவு ஒப்பந்த பத்திரம் (கன்ஸ்சஸன் அக்ரிமெண்ட்) மற்றும் நில குத்தகை ஒப்பந்தப்பத்திரம் (லேண்டு லீஸ் அக்ரிமெண்ட்) ஆகிய ஆவணங்களில் கையெப்பமிட ஆணையருக்கு அதிகாரம் வழங்க மாமன்றதீர்மான எண்.345, Dt.28.03.2008ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு அரசாணை வழங்க கோரி அரசுக்கு கடிதம் அனுப்பட்டது.

மேற்படி மாமன்ற தீர்மானத்தின் பேரில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.168, Dt.08.09.2008–ல் M/s.Madrai Municipal Waste Processing Company Private limited நிறுவனத்திற்கு 20 ஆண்டு குத்தகை அடிப்படையில் வழங்க ஏற்கொண்ட அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும் வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.574**

**பதிவு செய்யப்பட்டது.**

**4) JnS6/36327/2008**

மதுரை மாநகராட்சி ஜவஉறர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வண்டியூர், மாடக்குளம், வீரமுடையான், மற்றும் S.கொடிக்குளம். ஆகிய கண்மாய்களையும், அக்கண்மாய்யை நிரப்பும் வாய்க்கால்களையும் சீரமைத்து, கண்மாய்களில் நீர் பிடிப்பினை அதிகரிக்கவும் கண்மாய் சுற்றியுள்ள பகுதிகளை அழகுபடுத்தி சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஏற்படுத்தவும் ரூ.125.09/- கோடி திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய மாநில அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை நிறைவேற்றுவதன் மூலம் மதுரை நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிலத்தடி நீர் வெகுவாக உயர்வதுடன், கண்மாயை சுற்றி ஆழ்துளை கிணறு அமைத்து அதன்மூலம் நாளொன்றுக்கு சுமார்.12.2.MLD தண்ணீர் மதுரை மக்களுக்கு வழங்க முடியும். தற்போது கண்மாய்களும் வாய்க்கால்களும் பொதுப்பணித்துறையின் கீழ் வருவதால் மேற்படி கண்மாய்களை மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் புனரமைப்பு செய்ய அரசின் அனுமதியை பெறலாம்.

பொதுப்பணித்துறை அரசாணை எண்.(ப) எண்.240/22.05.08-ல் கோவை மாநகராட்சிக்கு JnNurm திட்டத்தின் கீழ் எட்டு குளங்களை புனரமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதே போல மதுரை மாநகராட்சிக்கும் மேற்படி குளங்கள், வாய்க்கால்களை புனரமைப்பு செய்து நிலத்தடி நீரை பெருக்கவும், ஆழ்துளை கிணறு அமைத்து மதுரை மக்களுக்கு கூடுதல் தண்ணீர் வழங்குவதற்கு ஆணை வழங்க அரசினை கேட்டு கொள்ளலாம் என மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.575**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 5) JnS5/33382/2008

மதுரை மாநகராட்சி ஜவஉறர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இரண்டாவது வைகை குடிநீர் திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் மழைநீர் வடிகால் அமைத்தல், பாதாள சாக்கடை அமைக்கப்படாத பகுதிகளில் பாதாளசாக்கடை அமைத்தல் ஆகிய பணிகளுக்கு மத்திய அரசு மற்றும் மாநில அரசு ஒப்புதல் பெறப்பட்டு, டெண்டர் வரவழைக்கப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை ஒப்புதல் பெறப்பட்ட கீழ்காணும் திட்டங்களில் மத்திய அரசு 50% மானியமும் மாநில அரசு 20% மானியமும் மாநகராட்சியின் பங்குத்தொகை 30% ஆகும்.

| வ.எண். | திட்டத்தின் பெயர் | மதுரை மாநகராட்சியின் பங்களிப்பு தொகை கோடியில் |
|---|---|---|
| 1 | இரண்டவாது வைகை குடிநீர் திட்டம் | 29.686 |
| 2 | திடக்கழிவு மேலாண்மை திட்டம் | தனியார் பங்களிப்புடன் **(PPP Mode)** செயல்படுத்தப்பட்டு வருகிறது. |
| 3 | மழைநீர் வடிகால் அமைத்தல் | 167.806 |
| 4 | விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை அமைத்தல் | 90.840 |
| மொத்தம் | | **288.32** |

மேற்கண்ட திட்டங்களுக்கு மாநகராட்சி பங்களிப்பு தொகை ரூ.288.32 கோடி தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி நிறுவனங்களுடமிருந்து (TNUFISL) கடனாக பெற்று நிறைவேற்ற மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.576**
**குறிப்பு ஒப்புக்கொள்ப்பட்டது.**

## 6) JnS2/21387/2008

மதுரை மாநகராட்சி ஜவஉறர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் விடுபட்ட பகுதிக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைக்க சிப்பம் III-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் M/s.டி.சி.எல்–எஸ்.இ.டபிள்யு ஜோதி நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி 16.07.08 தேதியன்று பெறப்பட்டு, விலைகுறிப்பு கேட்கப்பட்டு, குறைப்பு செய்து மேற்கண்ட ஒப்பந்தபுள்ளியை தமிழக அரசின் ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிப்பு குழுவிற்கு மாமன்ற தீர்மான எண்.492, நாள் : 30.07.08-ல் பரிந்து அனுப்பி வைக்கப்பட்டது. 16.09.08-ம் தேதி அன்று சென்னையில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிப்பு குழு மறு ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிப்பு குழுவின் தீர்மானத்தின்படி மறு ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்ற ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.577**
**குறிப்பு ஒப்புக்கொள்ப்பட்டது.**

## 7) மதி 1/33668/2008

மதுரை (தெற்கு) மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) அவர்களின் கடிதம் ந.க.எண்.6883/அ3/08 நாள் : 28.08.2008-ல் மதுரை (தெற்கு) பதிவு மாவட்டத்திற்குட்பட்ட இணை சார்பதிவகம் எண்.4, அலுவலக கட்டிடம் கட்ட 10 சென்ட் இடம் மாநகராட்சி பகுதியில் ஒதுக்கீடு செய்து தருமாறு கோரியுள்ளார்.

68–வது வார்டு மாமன்ற உறுப்பினர் தமது 11.09.2008-ந் தேதிய கடிதத்தில் தமது பகுதியில் சார்பதிவாளர் அலுவலகம் கட்ட இடம் ஒதுக்கீடு செய்து தருமாறு கோரியுள்ளார்.

மேற்கண்ட இரண்டு கோரிக்கைகளையும் ஏற்று மதுரை மேற்கு மண்டலம் பழங்காநத்தம் சர்வே வார்டு 12, T.S.No.5-ல் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் மாநகராட்சி கட்டுப்பாட்டில் சத்துணவு கூடம், பள்ளி கூடம், சுகாதார அலுவலகம் மற்றும் ISB கட்டிடம் உள்ள பகுதியில் 405.ச.மீட்டர் (4355ச.அடி) இடத்தை ஒதுக்கி வழங்க மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.578**
**குறிப்பு ஒப்புக்கொள்ப்பட்டது.**

## 8) ந.பொ.1/19479/2008

மதுரை மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.8-ல் அமைந்துள்ள சிறுவர் பூங்கா பயனற்ற நிலையில் உள்ளதால், அதை இலவசமாக சீர்படுத்தி மதுரை மாநகராட்சி பூங்காவாக சிறுவர், சிறுமிகள் பயன்படுத்தும் வகையில் அமைக்கவும், அப்பூங்காவிற்கு தேவையான விளையாட்டு சாதனங்கள் அமைத்து கொடுத்து பராமரிப்பு செய்யவும் அண்ணாநகரில் அமைந்துள்ள வாசன் ஐ கேர் நிறுவனத்திற்கு அனுமதி மூன்றாண்டுகளுக்கு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளிரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.579**
**தற்பொழுது இந்த பொருள் பரிசீலிக்க தேவையில்லை என மாமன்றம் தீர்மானிக்கிறது.**

## 9) ந.பொ.1/24427/07

மத்திய அரசின் தேசிய நதி நீர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சி பகுதியில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தினரால் (CMWSSB) மேற்கொள்ளப்பட்டு வரும் இரண்டாம் கட்ட (Phase II ) பாதாள சாக்கடை திட்ட பணிகளை மாநகராட்சி பொறுப்பு ஏற்பதற்காக மூன்றாவது நபர் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு தொழில் நுட்ப ஆலோசகராக M/s.COS Consultancy Services நிறுவனம் நியமனம் நியமிக்கப்பட்டது. இந்நிறுவனம் இரண்டாம் கட்ட பாதாள சாக்கடை திட்ட பணிகளில் வைகையாற்றின் தென்கரை பகுதிகளில் (SRV) தொழில்நுட்ப அடிப்படையில் ஆய்வு செய்து புதை சாக்கடை திறப்பு வாய்கள் (Manholes) குறித்து கீழ்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

- மண் அகற்றப்பட்டவில்லை (Silt to be removed in all Manholes)
- உள்பக்கப் பூச்சு பூசப்பட வேண்டும். (Inside Plastering to be made in all manholes)
- 80% வடிவமைப்பின்படி இல்லாதது (80% Not as per Design)
- இரும்பு படிக்கட்டுகளுக்கு பதிலாக PVC படிக்கட்டுகள் பொருத்திருப்பது. (PVC Steps has to be removed and CI step are to be provided)
- இரும்பு படிக்கட்டுகள் அமைக்காமல் விடப்பட்டது( CI Steps has to be Provided.)

M/s. Cos Consultancy Services நிறுவனத்தால் அறிக்கை மூலம் சமர்ப்பித்துள்ள மேற்கண்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும்படி மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு நேர்முக கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் மாமன்றத்தின் தகவலுக்கும் பார்வைக்கும் சமர்ப்பிக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.580**
**பதிவு செய்யப்பட்டது.**

## 10) ம.பொ.5/ம.எ.964/07-08

மதுரை மாநகராட்சி வார்டு எண்.55, மதுரை கோட்ஸ் ரோடு A.A.ரோடு B.B.ரோடு மற்றும் C.C.ரோடு மண் சாலையை சிமிண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றும் வேலைக்கு ரூ.23,30,000/-க்கு மதிப்பீட்டு தயாரிக்கப்பட்டு மேற்கண்ட மதிப்பீட்டு நிர்வாக ஒப்புதலுக்கு மாமன்ற தீர்மான எண்.321, நாள் : 02.01.2008-ல் குறிப்பு நிறைவேற்றப்பட்டு டெண்டர் வரவழைக்கப்பட்டதில், இரண்டு சீலிட்ட டெண்டர்கள் வரப்பெற்றன. அதில் M.M.கார்த்திகேயன், 204D/1, பகவத்சிங் முதல் தெரு, காமராஜர் சாலை, மதுரை என்ற ஒப்பந்ததாரின் மதிப்பீடு விலை விகிதத்திற்கு 0.01% குறைவாக கொடுத்துள்ளதை மதிப்பாய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில், மேற்கண்ட டெண்டரை ஏற்பு செய்து கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டது. எனவே, அன்னாருக்கு வேலை துவங்கும் உத்தரவு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.581**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 11) JnS4/22652/08

மதுரை மாநகராட்சி ஜவஉறர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தில் சாலை போக்குவரத்து அபிவிருத்தி திட்டத்தின் கீழ் **ஒருங்கிணைந்த சாலை போக்குவரத்து அபிவிருத்தி திட்ட அறிக்கை (Comprehensive Mobiltiy Plan ) தயாரிக்கப்பட்டு மத்திய அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட** அறிக்கையில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கென கீழ்கண்ட உபதிட்டங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

1. தனியார் பேருந்து நிறுத்துமிடம் அமைத்தல் (தோராயமாக ரூ.60.00கோடி) (Development of Omni Bus Terminus)
2. சரக்கு வாகனங்கள் நிறுத்திமிடம் (கோச்சடை) (தோராயமாக ரூ.37.00 கோடி) (Development of Truck Terminal)
3. பாரதியார் வணிக வளாகத்தில் அடுக்குமாடி வாகன நிறுத்துமிடம் மற்றும் சென்ட்ரல் மார்கெட் இருக்கும் இடத்தில் வாகன நிறுத்துமிடம் (தோராயமாக ரூ.25.00 கோடி)
4. துரித பேருந்து சாலை அமைத்தல் (தோராயமாக ரூ.301.43 கோடி)
5. கே.கே.நகர் அருகில் நவீன வணிக வளாகம் அமைத்தல் (தோராயமாக ரூ.150.00 கோடி)

மேற்காணும் 5 திட்டங்களையும் தனியார் பொது மக்கள் பங்களிப்பு மூலம் செயல்படுத்தவும் மேற்படி திட்டங்களை செயல்படுத்த “தனி அமைப்பை ” (Special Purpose Vehicle (SPV)) உருவாக்கி நிர்வகிக்க அரசின் ஒப்புதலை பெற மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.582</u>
<u>குறிப்பு கொள்ளப்பட்டது</u>

## 12) JnS/10161/08

மதுரை மாநகராட்சி ஜவஉறர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 24 மணி நேரமும் குடிநீர் வழங்க (24 x 7) தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு எண்கள் 6,7&8 ஆகியவற்றிற்கான திட்டம் தனியார் மற்றும் பொதுமக்களின் பங்களிப்பு செயலாக்கம் முறையில் ஒப்பந்தப்புள்ளி 11.07.2008 அன்று கீழ்காணும் நிறுவனங்களிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. M/s. ஹைட்ரோ காம்ப் எண்டர்பிரைஸஸ் இந்தியா பி.லிட் சென்னை.
2. M/s. ஐஸ்கோ லிமிடெட் சாம்சட்பூர்.

ஒப்பந்தப்புள்ளிகளை ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்க M/s. இன்மாஸ் சென்னை நிறுவனத்தார் ஆலோசகராக பணியமர்த்தப்பட்ட மேற்காணும் இரண்டு நிறுவனங்களின் தொழில் நுட்ப தகுதி திறனாய்வு குழுவால் ஆய்வு செய்யப்பட்டது. அதன் பேரில் 11.**08.2008** அன்று திறனாய்வு குழுவின் முன் விலைப்புள்ளி திறக்கப்பட்டது. இதில் மேற்கண்ட இரண்டு நிறுவனங்கள் கீழ்கண்ட விலைவிகிதம் கொடுத்துள்ளது.

| வ. எண். | வேலையின் விபரம் | M/s. . ஹைட்ரோ காம்ப் எண்டர்பிரைஸஸ் இந்தியா பி.லிட் சென்னை. | ஐஸ்கோ லிமிடெட் சாம்சட்பூர் |
|---|---|---|---|
| 1 | 24 மணி நேரமும் குடிநீர் வழங்க (24x7) தேர்தெடுக்கப்பட்ட வார்டு எண்கள் 6,7&8 தனியார் மற்றும் பொது மக்களின் பங்களிப்பு முறையில் செயலாக்க திட்டம் | Rs.14,64,05,355.00 | Rs.21,61,71,207.00 |

11.08.08 அன்று நடந்த திறனாய்வு குழு கூட்டத்தில் M/s.ஹைட்ரோ – காம்ப் எண்டர்பிரைசஸ் (இந்தியா) பி.லிட் சென்னை நிறுவனம் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள காரணத்தினால் மேற்படி நிறுவனத்துடன் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை நடத்த தீர்மானிக்கப்பட்டது. 19.09.08 அன்று M/s.ஹைட்ரோ – காம்ப் எண்டர்பிரைசஸ் (இந்தியா) பி.லிட்.,சென்னை நிறுவனத்தாருடன் திறனாய்வு குழுவின் முன் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை செய்யப்பட்டது. இதில் மேற்படி நிறுவனத்தார் தாங்கள் கொடுத்துள்ள விலை விகிதத்தை குறைக்க இயலாது என்றும் தங்களால் கொடுக்கப்பட்ட விலை விகித கணக்கீட்டில் தவறு உள்ள காரணத்தினால் தாங்கள் கொடுத்துள்ள விலை விகிதம் ரூ.14,64,05,355 லிருந்து ரூ.13,53,79,609,00 ஆக குறைகின்றது. எனவே தங்களால் மேலும் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளனர். எனவே,M/s.ஹைட்ரோ – காம்ப் எண்டர்பிரைசஸ் (இந்தியா) பி.லிட்., சென்னை நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த விலை விகிதம் ரூ.13,53,79,609.00 ஏற்று வேலை உத்திரவு வழங்க மாமன்றத்தின் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.583</u>
<u>குறிப்பு கொள்ளப்பட்டது</u>

(ஒம்...) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

மதுரை
நாள் : **25.09.2008**

* * * * * * *